**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2276/ஆ5/2026, நாள். /07/2026**

.....

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அறிவியல் இயக்கம் – அறிவியல் "விஞ்ஞானத்துளிர்" மாத இதழ் சார்பாக நடத்தப்படும் குழந்தைகள் அறிவியல் மாநாடு – துளிர் வினாடி வினா மற்றும் தேசிய அறிவியல் சார்ந்த நிகழ்வுகள் – பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் – சார்பு

பார்வை 1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.035870/எம்2/இ2/2026, நாள். 24.06.2026

•••••

பார்வை 1ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, பள்ளிகளின் அன்றாட செயல்பாடுகளுக்கு இடையூறின்றி "தமிழ்நாடு அறிவியல் இயக்கம்" செயல்பாடுகள் அனைத்தும் பள்ளிக் கல்வித்துறை ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளைச் சேர்ந்தே நடைபெற்று வருகிறது. அவ்வகையில் 2026–2027ஆம் கல்வியாண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள செயல்பாடுகள் பின்வருமாறு,

| வ. எண். | நிகழ்வின் பெயர் | நடைபெற உள்ள மாதங்கள் | |
|---|---|---|---|
| 1 | தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு– 2026 | ஜூன் – டிசம்பர் 2026 | ஆசிரியர்களுக்கான இணையவழி / நேரடி கூட்டம் மற்றும் குழந்தைகள் நேரடியாக சந்திக்கும் ஒரு நாள் நிகழ்வு |
| 2 | துளிர் வினாடி வினா மற்றும் திறனறிதல் தேர்வு | ஆகஸ்ட் – அக்டோபர் 2026 | ஒன்றிய / மாவட்ட / மண்டல / மாநில அளவில் ஒரு நாள் நிகழ்வு |
| 3 | வானியல் நிகழ்வு | ஆக்டோபர் 2026 – பிப்ரவரி – 2027 | பள்ளி அளவில் ஒரு நாள் / மாவட்ட / மாநில அளவில் |
| 4 | தேசிய அறிவியல் தின நிகழ்வுகள் | பிப்ரவரி – 2027 | பள்ளி அளவில் ஒரு நாள் . மாவட்ட / மாநில அளவில் |
| 5 | அறிவியல் கண்காட்சி / புத்தகக் கண்காட்சி . கோளரங்க காட்சிகள் | ஜூலை 2026 – பிப்ரவரி 2027 | பள்ளி அளவில் / ஒன்றிய அளவில் ஒரு நாள் |
| 6 | கணித அறிவியல் திருவிழாக்கள் | ஜூலை 2026 – பிப்ரவரி 2027 | பள்ளி அளவில் / ஒன்றிய அளவில் / மாவட்ட அளவில் ஒரு நாள் |
| 7 | கணித பயிலரங்குகள் / பயிற்சிகள் | ஜூலை 2026 – பிப்ரவரி 2027 | 4 மாவட்டங்கள் அடங்கிய ஒரு மண்டலம் 10 மண்டலங்களில் இரண்டு நாள் ஆசிரியர்களுக்கு |

எனவே மேற்கண்ட நிகழ்வுகளில் விருப்பமுள்ள பள்ளி மாணவ / மாணவிகள் மற்றும் ஆர்வமுள்ள ஆசிரியர்கள் பங்கேற்கும் வகையில் உரிய விதிமுறைகளை பின்பற்றி பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பணிகள் பாதிக்காத வகையில் மாணாக்கர்களின் நலன் பாதிக்காத வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுறுத்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

13/7/26

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அரசு / அரசு உதவிபெறும் நடுநிலை /உயர் / மேல்நிலைப் பள்ளிகள் / தனியார் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்–

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட செயலாளர்,
   தமிழ்நாடு அறிவியல் இயக்கம்,
   வேலூர் மாவட்டம்.